# சைவசித்தாந்தம் கூறும் முக்திக்கோட்பாடு: சிவப்பிரகாசத்தை அடிப்படையாகக் கொண்டது

**கு. கீர்த்தனா**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*சைவத்தின் முடிந்த முடிவான கொள்கையே சைவசித்தாந்தமாகும். சித்தாந்தமானது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களை ஏற்று நிற்கின்றது. பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்பவற்றின் தொகுதியாகும். பசுவினது குறிக்கோள் தன்னைப் பற்றியுள்ள பாசத்திலிருந்து விடுபட்டு பதியினை உணர்ந்து இன்பம் துய்த்தல் வேண்டும் என்பதாகும். அதாவது பசுவானது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்து விடுதலை பெற்று அருளோடு கூடியபடி பேரின்பத்தை எய்துவதே மேலான முத்தி என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும். இது இறைவனுடைய அருளினாலும் பசுவினுடைய முயற்சியினாலும் அநாதியான ஆன்மாவைப் பசுத்துவப்படுத்தும் மலங்கள் நீங்கினால் சித்தியாகும். மெய்கண்டசாஸ்திர நூல்களில் ஒன்றானதும் உமாபதிசிவாச்சாரியாரால் ஆக்கப்பெற்றதுமான சிவப்பிரகாசத்தில் பொது அதிகாரத்தின் இறுதியில் முக்திநிலை பற்றிய கருத்தாடலானது ஐம்பதாவது பாடலில் கூறப்படுகின்றது. இதில் புறச்சமயத்தாரது பத்து வகையான முக்தி பற்றியும் அவற்றின் பொருத்தமின்மையையும் விளக்கி இறுதியில் சைவசித்தாந்தம் கூறும் சிவசாயுச்சிய முக்தியே மேலான முக்தி என்பதை நிறுவியுள்ளார். சிவப்பிரகாசமானது புறச்சமய முக்தியை மறுக்கும் தருக்கமுறையினையும் சைவசித்தாந்த முக்தியின் பொருத்தப்பாட்டினையும் அறிவாராய்ச்சியியல் அடிப்படையில் ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வானது விவரண, பகுப்பாய்வு ஆகிய ஆய்வுமுறையியல்களினால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பிரகாசத்தில் பிற சமயங்களின் முக்திக்கொள்கைகள் அனைத்தும் விளக்கப்பட்டு அவை யாவும் பரபக்கமென அளவைப்பிரமாணத்தின் வாயிலாக நிராகரிக்கப்படுகின்றன. இவ்வகையில் சிவப்பிரகாசமானது பத்து வகையான முக்தியைக்கூறி மறுத்தாலும் சிறந்த முக்தி அல்லது உன்னதமுக்தியாக சைவசித்தாந்த முக்தியை கூறியிருப்பதை ஆய்வினூடாக அறிந்துகொள்ளமுடிகிறது.*

**திறவுச்சொற்கள்:** சைவசித்தாந்தம், ஆன்மா, முக்திக்கோட்பாடு, சிவப்பிரகாசம், அளவைகள்

[1] *சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*kkeerthu0911@gmail.com*

**ஆய்வு அறிமுகம்**

சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை விளக்குகின்ற அடிப்படை நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். இவற்றுள் ஏழாவதாக வைத்து எண்ணப்படும் நூல் சிவப்பிரகாசமாகும். இந்நூலினை உமாபதிசிவாசாரியார் அருளினார். இவர் அருளிய எட்டு சித்தாந்த நூல்களுள் இந்நூலானது முதற்கண் வைத்து எண்ணப்படுகின்றது. இந்நூல் சிவஞானபோதத்தின் சார்புநூல் என்று குறிப்பிடப்படுகிறது. சிவப்பிரகாசம் காப்புச்செய்யுள் தவிர மொத்தம் நூறு விருத்தப்பாக்களால் ஆனது. இது பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்று இரண்டு பகுதிகளைக் கொண்டது. பொது அதிகாரத்தில் ஐம்பது பாடல்களும் உண்மை அதிகாரத்தில் ஐம்பது பாடல்களும் உள்ளன. இவ்வகையிலே முக்தி நிலைபற்றி பொது அதிகாரத்தின் இறுதியில் ஐம்பதாவது பாடலில் கூறப்படுகிறது. பிற சமயங்களில் கூறப்படுகின்ற பத்து வகை முக்தி நிலைகளை எடுத்துக்கூறி அவையாவும் பழிசேர் முக்தி என்றும் சைவசித்தாந்தம் கூறும் பரமுக்தியே மேலான முத்தி என்று கூறுகின்றது.

**சித்தாந்த முக்தி**

சைவசித்தாந்தம் முக்தியினை ‘வீடுபேறு’ என்று கூறுகின்றது. இதில் உள்ள ‘விடுதல்’ என்பது பாசத்தை விடுதல் என்றும் ‘பெறுதல்’ என்பது சிவத்தைப் பெறுதல் என்றும் பொருள் பட்டு பாசத்தில் இருந்து நீங்கி சிவத்தைப் பெறுதலே சைவசித்தாந்தம் கூறும் முத்தியாகும். அதாவது ஆன்மா தன்னைக் கட்டியிருக்கும் அஞ்ஞானமாகிய மலங்களினின்று விடுபட்டு மெய்ஞ்ஞானமாகிய இறைவனை அடைதலே முக்தியாகும். சித்தாந்த முத்திபற்றி அருணந்தி சிவாச்சாரியார் சிவனடியைச்சேரும் முக்தி என்றும், உமாபதிசிவாச்சாரியார் திருமலமும் அகல உயிர் அருள்சேர் முக்தி திகழ் முக்தி என்றும் சித்தாந்த முக்தியை கூறுகின்றனர். அடிசேர் முக்தியில் உயிர் பிறவி வெப்பம் நீங்கித் தண்மையாகிய இன்பம் பெற்று மகிழ்தலால் இது இறைவனது திருவடிநிழல் என்று சொல்லப்படுகின்றது. இவ்வடி நிழலின் இன்பத்தை,

“மாசில்வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே” (தேவாரம்: 1612)

என்று அப்பர் கூறுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

“உள்ள மலம் நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே- கள்ளவழிபூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முக்தியெனத் தேறு” (முக்திநிச்சயம்: 22)

என்றும் முக்தி நிச்சயத்தில் குருஞான சம்பந்தர் கூறுகின்றார். எனவே சிவத்தோடு அத்துவிதமாய் கலந்து ஆன்மா சிவானந்தத்தில் திளைத்தலே சித்தாந்த முக்தி எனப்படுகிறது. பசுவானது பாசத்தில் அழுந்தி நிற்கும் நிலை பெத்தம். அது பதியில் அழுந்தி நிற்கும் நிலையே முக்தி. உயிர் பெத்தத்தில் ஆணவமலத்தோடு எவ்வாறு தான் என வேறு தோன்றாது அதில் அழுந்தி நின்றதோ அது போலவே முக்தியில் சிவத்தோடு தான் என வேறு தோன்றாது அதனில் அழுந்தி நிற்கும் என்பதே சித்தாந்த முக்தி. இதனையே தாயுமானவர்,

''ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்

தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ''

எனப் பாடுகிறார்.

முக்தியானது சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்கு வகைப்பட்டதென சித்தாந்திகள் கூறுகின்றனர். இங்கு சாலோகம் ஆன்மா இறையுலகில் இருக்கும், சாமீபம் ஆன்மா இறைவன் அருகினில் இருக்கும், சாரூபம் ஆன்மா இறை உருவத்தில் இருக்கும், சாயுச்சியம் ஆன்மா இறைவனோடு இரண்டறக்கலந்திருக்கும். முதல் மூன்றையும் அபரமுக்தி என்றும், சாயுச்சிய முக்தியை பரமுக்தி என்றும் கூறப்படுகிறது. இதனை,

''சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய

சாரூப்பிய சாயுச்சியமென்று சதுர்விதமாம்'' (சிவஞானசித்தியார் சுபக்கம் : 270)

எனும் சித்தியார் பாடல் மூலம் அறியலாம்.

**முக்தி நிலையில் பேரின்பம்**

அயரா அன்பு செய்யும் தன்மையால் நன்றி மறவாது பொங்கிப் பெருகும் பேரன்பால் அவன் திருவடி பற்றி வாழ்தலே ஆன்மாவின் முக்திநிலை. இம்முக்தியால் அடையும் பேரானந்தத்தை அருளாளர்கள் அனுபவித்து பாடியுள்ளனர்.

''.... காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே

காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக் காலே''

எனத் திருத்தாண்டகத்தில் அப்பர் பாடியுள்ளதை காணமுடிகிறது.

முக்திநிலையில் உயிர்கள் அனுபவிக்கும் பேரின்பமானது கரும்பு, தேன், பால், கற்கண்டு, சர்க்கரை முதலியன கலந்தவை போன்றதாகும் என அருணந்திசிவாச்சாரியார் கூறுகின்றார். இந்த இன்பமான முக்தியினை ஆன்மாக்கள் அனுபவிக்கும் இன்பத்தினை வாயினால் விளக்க முடியாது எனவும் அதனை அனுபவித்தே அறிந்து உணர வேண்டும் எனவும் சித்தாந்தம் கூறுகிறது. இதனை,

"இங்ஙனம் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன்
அஞ்ஞானம் இருந்தது என்று உந்தீ பற
அறியும் அறிவன்று உந்தீபற" (திருவுந்தியார்:4)

எனும் பாடல் மூலம் திருவியலூர் உய்யவந்த தேவரும்,

"....மருவி இருவரும் புணர வந்த இன்பம்
வாயினாற் பேசரிது மணந்தவர்தாம் உணர்வார்" ( சிவஞான சித்தியார் சுபக்கம்:288)

என அருணந்திசிவாச்சாரியாரும் விளக்குகின்றனர். இந்நிலையினை அப்பர் பெருமான்,

"கனியிலுங் கட்டி பட்ட கரும்பிலும்
பனி மலர்க் குழற்பாவை நல்லாரிலும்" (தேவாரம்:1214)

எனவும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பிற சமய முக்தி**

உலகில் காணப்படும் பல்வேறு சமயங்களும் முத்திநிலைபற்றி தத்தமது எல்லைவரை அதற்கு விளக்கம் தருகின்றது. இதனை சைவசித்தாந்த வழிநூலாகிய சிவஞான சித்தியார்,

"இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும்
ஏந்திழை ஆர் முத்தி என்றும் இரும்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும் முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும் அட்டகுணம் முக்தி என்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்
விவேகமுத்தி என்றும் தன் மெய்வடிவாய் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும் செப்புவர்கள்
சிவன் அடியைச் சேரும்முத்தி செப்புவது இங்குயாமே"

(சிவஞானசித்தியார் சுபக்கம் : 264)

எனும் பாடல் மூலம் விளக்குகிறது. இக்கருத்தினையே சிவப்பிரகாசம்,

"அரிவையரின் புறுமுக்தி கந்தமைந்தும் அறுமுத்தி திரிகுண முமடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போமுத்தி விக்கிரக நித்த முத்தி மலம்பே முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி பாடாண முத்தியினது பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயிர் அருள் சேர்முத்தி திகழ் முத்தி யிது முத்திக் திறந்ததாமே"

(சிவப்பிரகாசம்: 50)

எனும் பாடல் மூலம் விளக்குகின்றது. இதில் உலகாயதன், புத்தன், சமணர், பிரபாகரன், பேதவாதி, சிவசமவாதி, சாங்கியன், பாற்கரியன், சித்தன், பாடாணவாதி என இவர்களது முக்தி நிலை பற்றிய கருத்து அமைகின்றன.

சார்வாகர் எனப்படும் உலகாயதர்கள் கடவுள், ஆன்மா, கன்மம் என்பன இல்லை என்று குறிப்பிடுவதோடு ‘‘அரிவையரின் புறு முக்தி’’ என்பதற்கமைய இளமங்கையரைக் கூடி இன்பம் புரிதலே முக்தி என்கின்றனர். இதனை சிவஞானசித்தியார் பாடல் ‘‘இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும் ஏந்திழை ஆர் முக்தி’’ என்கிறது. உலகாயதர்களைப் பொறுத்தமட்டில் பூதங்களே நிலையானவை என்றும் அவை தாமாகவே இயங்கும் இயல்புடையவை என்றும் கூறப்படுகின்றது. இதனாலேயே கடவுள், ஆத்மா, கன்மம் என்பவற்றை ஏற்காது சிற்றின்பமே முக்தி என்பர். ஆன்ம விடுதலை என்பது கற்பனை. இன்பதுன்பங்கள் இயல்பானவை அவற்றிலிருந்து விடுபடுவது என்பது இயலாதது மட்டுமன்று இயல்புக்கு மாறானதும் கூட நரகம், சொர்க்கம் என்பவை மதச்சடங்குகளை நியாயப்படுத்த மனிதன் செய்த கற்பனைப் படைப்புக்கள். உண்பதும் உறங்குவதும் மகிழ்வதும் அல்லாமல் வேறு உறுதிப்பொருள் இல்லை என்பது இவர்களது உறுதியான கருத்தாகும். இவர்களது கருத்தினை மறுத்துரைக்கின்ற வகையில் மகளிரிடத்து உண்டாகிய இன்பம் நிலையில்லாதது இது சிற்றின்பம் ஆகவே பேரின்பமாகிய முக்தியன்று என்கிறது சிவப்பிரகாசம்.

பௌத்தம் வீடுபேற்றினை நிர்வாணம் என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். நிர்வாணம் என்றால் அணைதல். ஆசைகள் அணைவதே, வாசனைகள் அடங்கிப்போதலே அது. ஆசைகளினாலும் வாசனைகளினாலுமே துக்கம் உண்டாகிறது. துக்கங்கள் முழுவதும் அற்ற நிலையே நிர்வாணம். பொருளைப்பெறும் விருப்பம் ஆசை. எல்லாத்துன்பங்களுக்கும் காரணம் சம்ஸ்காரம் ஆகும். இந்த தத்துவத்தை அறிந்து ஆசையையும் சம்ஸ்காரத்தையும் அழித்து விடும். மனிதன் நிர்வாணம் பெறுவான் என்பதே பௌத்த கொள்கை. நால்வகைப் பௌத்தர்களில் ஒருசாரார் ஆன சௌந்திராந்திகள் கந்தமைந்து மறுமுத்தி என்பதற்கேற்ப உருவம், வேதனை, குறிப்பு, பாவணை, விஞ்ஞானம் என்ற ஐந்து கந்தங்களும் கெடுவதே முக்தி என்கின்றனர். இங்கு இன்பமும் அறிவும் இல்லாது பற்றியும் இவர்களது கருத்துப்படி ஆன்மா இல்லாது பற்றியும் கந்தங்கள் கெட்டுப்போவதென்பதால் இங்கு பெறுவான் இல்லாது போவதால் இதுவும் உண்மையான முக்தியன்று என சிவப்பிரகாசம் கூறுகிறது.

சமணக்கொள்கைப்படி உலகம், உயிர்கள் இறைவனால் ஆக்கப்பட்டவை அல்ல. உயிர்கள் தம் நல்வினை, தீவினைக்கேற்ப இன்பதுன்பங்களை அடைகின்றது. ஐம்புல ஆசைகளையும் அறவே அழித்தொழிக்கும் உயிர் இரு வினைகளிலின்றும் நீக்கம் பெறும். இவ்வாறு இருவினைகளும் அறவே நீங்கிய உயிர் கடையிலாஅறிவு, கடையிலாஇன்பம், கடையிலாவீரியம், கடையிலாகாட்சி ஆகிய இவற்றை எய்தி எல்லா உலகங்களுக்கும் உயர்ந்ததாகிய வீட்டுலகத்தை அடையும். இது அருகதநிலை எனப்படுகிறது. சமணத்தில் நிகண்ட வாதிகள் கூறுகின்ற முக்தி நிலையானது திரிகுணமடங்கு முத்தி என்பதற்கமைய

முக்குணங்களும் அடங்குவதே முக்தி எனக்குறித்து நிற்கின்றது. அதாவது ஞான ஆவரணீயம் முதல் உள்ள எட்டு தீக்குணங்களும் நீங்கி அநந்த ஞானம் முதலிய எட்டு நற்குணங்களையும் பெறுதலேயாகும். திரிகுணம் என்பது சாத்விகம், இராஜதம், தாமசம் எனும் மூன்றுமேயாகும். இவை பிறகிருதிக்கு உட்பட்டவையே. சைவசித்தாந்தம் கூறும் முக்தி மாயையை கடந்துள்ள அத்துவித முக்தியாகும்.

மீமாம்சையில் ஒரு பிரிவினராக பிரபாகரர் காணப்படுகின்றனர். இவர் கூறும் போது ஆன்மா மாற்றம் எதையும் அடைவதில்லை என்று கூறுகிறார். இதுவே இவரின் கொள்கை ஆகும். வைசேடிக மதத்தினர் கூறுவது போல ஆன்மா பாடாணம் (கல்) போல் கிடப்பதே முக்தி என்று கூறுகின்றனர். ஆன்மா மாற்றம் எதையும் அடைவதில்லை. என்பதால் பாவ புண்ணியங்கள் இன்ப துன்பங்கள் எவையும் அடிப்படையில் ஆன்மாவை அனுகமாட்டாது. என்பது பிரபாகரின் கருத்தாகும். இதனை மறுக்கின்ற வகையில் ஆன்மா தன்னுடைய அறிவும் தொழிலும் கெட்டு கல்லைப்போல கிடப்பதுவே என மாறுபட்டு கூறுவது ஏற்வுடையதல்ல. அறிவு அழிந்த பின் ஆன்மா மட்டிலும் தனித்து இருந்து வீட்டு இன்பத்தை நுகர்கிறது என்பது பொருந்தாது.

பேதவாதிகள் வீட்டு நிலையிலும் உயிரும் இறையும் வேறுவேறாகவே நிற்கும் எனும் கொள்கையுடைமையினால் இவரை இவ்வாறு அழைப்பர். பேதம் என்பது வேறுபட நிற்றலை குறித்து நிற்கிறது. செம்பினிடத்து உள்ள களிம்பு இதர குளிகை பொருந்தக்கெட்டுப்பொன்னாகும் அது போல மலங்களுடன் சேர்ந்த உயிரும் இறைவன் இன்னருளால் அம்மலங்கெட வீடு பெறும். அதாவது திருவருளால் ஆணவம் கெட ஆன்மா நித்திய சுத்தனாய் விளங்குவதே முக்தி எனப்படுகிறது. பேதவாதிகள் மகா உருத்திரன் ஒருவனே சிவன் எனவும் சக்தி எனவும் சதாசிவன் எனவும் மகேஸ்வரன் எனவும் உருத்திரன் எனவும் நின்று சுத்த தத்துவங்களைப்படைத்து அவற்றைக்காரியப்படுத்தி நிற்றல் பற்றி அவ்வப் பெயர் பெறுபவனே அன்றி அவனில் பேதமில்லை என்று சொல்லப்படுகிறது. இக் கருத்திணை சிவஞான சித்தியார் ‘‘ஞானமே ஆன போது சிவன் தொழில் ஞானம்’’ எனும் செய்யுள் மூலம் அறியலாம். இங்கு ஆணவமலம் கெடுவதே முக்தியெனின் ஆணவம் அநாதியாகவே அழியாதாகையால் இதுவும் முக்தி அன்று.

சிவசமவாதம் ஆன்மாக்களின் மும்மலங்களும் நீங்கும் என்கிறது. அவ்வாறு நீங்கிய பின்பு ஆன்மாவின் சொரூபமாகிய இச்சா, ஞானாக்கிரியைகள் வழுங்கப்பெற்று சர்வஞ்ஞத்துவம் எனும் இறைவனுக்குரிய எண்குணங்களையும் பெற்று அவனுக்குச் சமமாக இருத்தலே முக்தியாகும். இதனை ‘‘தன் மெய்வடிவாம் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தி’’ என சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது. இதனை மறுக்கின்ற வகையில், உயிர் முக்தி நிலையில்

சிவத்திற்கு என்றும் அடிமையே அன்றி சிவத்தைபோல முழுமுதல் பொருளாகாது. முக்தியில் சிவன் இன்பத்தை கொடுக்க உயிர் அவ்வின்பத்தை பெற்று அனுபவிக்கும் அடிமைபொருளாகவே இருக்கும்.

சாங்கியமானது பிரகிருதி, புருடர்களை விவேகித்தறிவதே முக்தி என்கிறது. ஆன்மா விடுதலை பெறுவதற்கு வழிபாடுகள், கேள்விகள் முதலியவற்றை வழிகளாக சாங்கியம் ஏற்கவில்லை. தத்துவங்கள் இருபத்தைந்தினைப் பற்றிய தெளிந்த ஞானம் ஒன்றுதான் விடுதலைக்கு வழியாகும் எனக் கூறுகிறது. இன்பதுன்பங்கள் எல்லாம் முக்குணவயத்தால் புத்தி முதலிய தத்துவங்களுக்கு உரியனவேயன்றி நிர்க்குணமான புருடனுக்கு இல்லை. இருவினைகளின் விளைவாகிய இன்பதுன்பங்கள் புத்தி முதலியவற்றுக்குரியன என்பதை தெரிந்தும் புருடன் இவற்றில் நின்றும் ஒதுங்குகிறான். எனவே சாங்கிய முக்தி என்பது பௌத்தரின் நிர்வாணப் பேற்றினைப் போல இன்பதுன்ப நீக்கமேயாகும். சாங்கியமானது மெய்ஞானம் ஒன்றையே விடுதலைக்கு உகந்த வழியாக கூறுகின்றது. சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய ஆன்மா அவற்றில் பூரணமில்லாததாலும் இதுவும் முக்தியன்று.

ஏகான்மவாதபிரிவில் ஒன்றாகிய பாற்கரியர் முக்திபற்றி கூறுகையில் ஆன்மாவானது தனது இச்சா, ஞானக்கிரியைகளோடு பிரமத்திற்சென்றழிந்து பிரமத்தினோடு ஒன்றாவதே முக்தி என்பர். பிரமமே சடமும் சித்துமாய் உலகமாயிற்று. அங்஡னம் விகாரப்பட்டதை அறியாமையாற் பந்தமாயிற்று. வேதாந்த ஞானத்தால் உடம்புக்கு வேறாக ஆன்மரூபம் விளங்கும். அதன்கண் ஒடுங்குதலே முக்தியாகும். இங்கு பிரமம் உலகமாகப் பரிணமித்தது எனும் கொள்கை ஏற்புடையதல்ல. பிரமம் அறிவுடைய பொருள் உலகம் சடப்பொருள் அறிவுள்ள பொருளில் இருந்து அறிவுடைய பொருளே தோன்றுமே அல்லாது அறிவற்ற சடம் தோன்றாது எனவும் ஞானமும் கிரியையும் நிகழ வேண்டுமாயின் அது உடலோடு கூடிய உயிராலே முடியும். ஆனால் ஞானத்தையும் கிரியையினையும் விட்ட உயிரே பிரமத்தோடு கூடி வீட்டு நிலை அடையும் என்பது பொருத்தமற்றது. ஞானமும் கிரியையும் கெட்டால் உயிர் அழிந்துவிடும். அவ்வாறானால் எப்பொருள் பிரமத்தோடு கூடக்கூடும். அதுவன்றி உயிர் கெடாமலே பிரமத்தோடு கூடும் என்று பாற்கரியர் கூறினால் முக்தி இன்பம் இவ்வுலகிலே கிடைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கிடைப்பதில்லை. எனவே ஞானமும் கிரியையும் கெட்டு உயிர் முக்தி பெறும் என்பது பொருந்தாத கொள்கையாகும்.

சித்தமுக்தி என்பது அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம் என்னும் அட்டமாசித்திகளே முக்தி என்கின்றனர். ‘‘மணலில் நீர்வார்த்துச் சோறாக்கிக் கறி சமைத்து சிறுவர் பொழுதுபோக்கிற்காக ஆடும் விளையாட்டுப்போன்றது உலகியல் வாழ்வு. மணற்சோறு உண்மையான பசியைப்போக்காது என்பது போல உலகியல் அனுபவம் ஆன்ம

பசிக்கு உணவாகாது பிறப்பறுக்க வேண்டும் என்பதே ஆன்மப்பசி.'' (நாராயணன்,க., 1988:71) உயிரும் உடம்பும் உலகியல் கல்வியும் அனுபவமும் இறைவன் திருவடியைச் சேருவதற்குத் துணைசெய்வன. அதனால் பெறும் பயனே பிறப்பின்மை. 36 தத்துவங்களில் விரிவாகக் கிடக்கும் மாயா உலகிலிருந்து விடுபட்டு உண்மையான சிவ போகத்துள் ஆன்மா அழுந்திட வேண்டும். சிவத்தில் சீவனும் சீவனுள் சிவமும் எனக்கலந்து இன்புறும் அனுபவநிலையை முக்தி நிலை என்பர். சித்தர்களின் வழிமுறைகள் வேறுபட்டாலும் குறிக்கோளில் மாற்றமில்லை. பிறப்பறுப்பதும் அதனால் பேரின்பம் காண்பதும் ஆன்மப்பயணத்தின் குறிக்கோளாகச் சித்தர்கள் கொண்டுள்ளனர்.

பாடாணவாதி கூறுகையில் ஆன்மாவானது அறியும் தொழிலின்றிப் பாடாணம் போற்கிடப்பதே முக்தி. பாடாணம் என்றால் கல்லாகும். சுட்டறிவும் சுகதுக்க அனுபவமும் நீங்கிப் பாடாணம் போல் கிடத்தலாகும். முக்தியிலும் ஆணவமலமானது நீங்காதது என்கிறது. ஆன்மாவின் அறிவு சிவத்தோடு கூடாமல் மலத்தில் அடங்கிக் கல் போலக் கிடக்கும் என்கின்றது. கண்ணொளியை இருட்படலம் மறைத்துக்கொள்வது போல உயிரறிவை ஆணவமலம் மறைத்து நிற்கும். அதனால் பிறவித்துன்பம் மிகும். அம் மிகுதியால் உயிர் காலப்போக்கில் உலகு, பொறி முதலியவற்றுடன் வந்த அறிவை அறிவு அன்றென உவர்த்து திருவருள் வழி வீடுபேற்றிற்கு இலக்காகும். அவ்வாறு வீடுபெற்ற வழியும் உயிரிடத்து ஆணவமலம் நீங்குதல் இல்லை. இதனால் உயிர் யாதொரு இன்பதுன்ப நுகர்வு இன்றி கல் எனக்கிடக்கும் என்பது இவர்களது கொள்கையாகும். ஆன்மா அறிவு, இச்சை, செயல் இன்றி கல் போன்று கிடக்கும் நிலை ஆணவத்தோடு கூடிய கேவலநிலையேயாகும். முக்தி நிலை என்பது ஆன்மாவின் அறிவு பிரகாசிக்கும் சிவத்தோடு கூடிய அத்துவித நிலையேயாகும்.

இவ்வாறு பத்து வகையாக சொல்லப்பட்ட முக்திகளும் குற்றமுடையன. முக்தி நிலையைப்பற்றிய சரியான கொள்கை எதுவெனில் ஆணவம். கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்து விடுபட்டு உயிர் அருளோடு கூடிப் பேரின்பத்தை எய்துவதே முக்தியைப்பற்றிய சிறந்த கொள்கையாகும். பிறசமயம் கூறும் பத்து வகை முக்தி நிலைகளை எடுத்துக்கூறி அவையாவும் பழிசேர் முக்தி என்றும் சித்தாந்த முக்தி அருள்சேர் முக்தி என்றும் கூறுகின்றார். மலங்களிலிருந்து விடுபட்டு நிர்மலனாகிய இறைவனை அடைவதே உயிர்களின் முக்தி. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் படிப்படியாக நிகழ்ந்து இறுதியில் ஆன்மா இறைவனது அருளாலே அவனை அடைகிறது. இதனையே ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்கிறார் மாணிக்கவாசகர். தாள், தலை எனும் இரு சொற்கள் எவ்வாறு தாடலை என இணைந்து பொருள் தருகின்றதோ அது போல ஆன்மா இறைவனின் தாளை அடைந்து சிவமும் ஆன்மாவும் அத்துவிதமாகக் கலந்து பேரின்ப

நிலையை அடைகின்றது. இங்கு இறைவனும் உயிரும் இரண்டறக்கலந்து ஒன்றாய் நிற்பினும் தன் தனி இயல்பை அது ஒருபோதும் முற்றாக இழப்பதில்லை. இதனை திருவருட்பயன்,

"தாடலை போற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக் கொள்" (திருவருட்பயன்: 74)

எனக்கூறுகிறது. இறைவனும் ஆன்மாவும் வேறு வேறாக இருப்பினும் முக்திநிலையில் இறைவனின் திருவடிகளை அடைந்த ஆன்மா பேரின்பத்தில் ஒன்றாகித் திளைக்கின்றது. இதனை பெரிய புராணத்தில் அப்பர் வரலாற்றை நினைவு கூறும் போது சேக்கிழார்,

"நண்ணரிய சிவானந்த ஞானவடிவே ஆகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசும் அமர்ந்திருந்தார்"

எனக் கூறுவது இம்முக்தி நிலையை விளக்குவதாக அமைகிறது.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

இவ்வாறாக முக்தி நிலையாகிய வீடுபேறு எத்தகைய தன்மை உடையது என சிவப்பிரகாசம் 50 வது பாடலில் ஆசிரியர் பத்து வேறுபட்ட சமயங்களில் முக்தி நிலை பற்றிய கொள்கைகளை கூறி அவற்றின் பொருத்தமின்மையை எடுத்துக்கூறுகிறார். இவற்றின் விரிவுகள் சிவஞானசித்தியாரிலும் கூறப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். வட மொழி மரபில் உள்ள சித்தாந்த நூலான அஷ்டப்பிரகரணத்தில் சத்தியயோதி சிவாச்சாரியரால் நிறுவப்பட்ட மோட்சகாரிகை, பரமோட்சநிராசகாரிகை எனும் நூல்களில் சித்தாந்த மோட்ச கொள்கை ஆழமாக நோக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். மோட்ச காரிகையானது வைதிக சித்தாந்த முக்தி நிலை பற்றி நிரூபணம் செய்வதோடு பிற சமயத்தார் கூறும் முக்திகள் விடுதலையாகாது என்பதையும் சித்தாந்தம் கூறும் முடிவான முக்தியே பேரின்ப நெறி என்பதனையும் கூறுகிறது. பரமோட்சநிராசகாரிகையானது அதனுடைய பெயரிலேயே தனது குறிக்கோளை வெளிப்படுத்தியுள்ளது. பரமோட்சங்கள் எல்லாம் மோட்சமாகாது என்ற மோட்சகாரிகையின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவது போல பிற சமய முக்திகளை நிராகரிப்பதே அதன் இலட்சியமாகக்காணப்படுகிறது. இங்கு பிற சமயங்களின் முக்தி கொள்கைகள் அனைத்தும் விளக்கப்பட்டு அவைகள் யாவும் பரபக்கமென அளவைப்பிரமானத்தின் வாயிலாக நிராகரிக்கப்படுகின்றன. இவ்வகையில் சிவப்பிரகாசமானது பத்து வகையான முக்தியைக்கூறி மறுத்தாலும் சிறந்த முக்தி அல்லது உன்னதமுக்தியாக சைவசித்தாந்த முக்தியை கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உசாத்துணை

ஈசுரமூர்த்திப்பிள்ளை,ஆ., (2005), சிவப்பிரகாசம். சைவசித்தாந்த சபை.

கங்காதரன்,ச., (2012), சைவசித்தாந்தத்திறன், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.

சங்கரப்பிள்ளை,பொ., (1985), சைவசித்தாந்தம், தேவநேயன் அச்சகம், சென்னை.

சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள், (2001), சிவஞான சித்தியார் சுபக்கம், சிவஞான சுவாமிகள் பேரவை.

திருவிளங்கம்,மு., (1974), சிவப்பிரகாசம், செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், காங்கேசன் துறை.

நாராயணன்,க., (1988), சித்தர் தத்துவம், சபாநாயகர் பிரிண்டர்ஸ், சிதம்பரம்.

பாலசுப்பிரமணியன்,சி.மு., (2020), சிவஞானபோதம், நர்மதா பதிப்பகம், சென்னை.

மணி,சி.சு., (2001), சிவப்பிரகாசம், அருள்நந்திசிவம் அருட்பணிமன்றம், சிந்து பூந்துறை, திருநெல்வேலி.

லஷ்மணன்,கி., (1960), இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், எஷியன் அச்சகம், சென்னை.

ஜெயந்திரன், இ., (2015), சிவஞான சித்தியார் நோக்கில் புறச்சமயங்கள், சிவநெறி அறப்பணி மன்றம், கல்முனை.